அசல் வழக்கு எண். 31/2016 நாள்: 10.04.2026

வா.சா.1 திருமதி. கண்ணகி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

2) அசல் வழக்கு தாக்கல் செய்தவர் எனது கணவரா என்றால் ஆமாம். வழக்கு சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எங்களுக்கு பாத்தியப்பட்டது. எனக்கு இந்த வழக்கு சொத்து எப்படி கிடைத்தது என்றால் வழக்கு தாக்கல் செய்து கிடைத்தது. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்பதால் தெரியாது. எனது கணவர் வழக்கு தாக்கல் செய்யும்போது வழக்கறிஞருக்கு எனது கணவர்தான் தகவல் கூறியிருப்பார் என்றால் சரிதான். எனது கணவர் தாக்கல் செய்த வழக்கில் தாவா சொத்து அம்மனியம்மாள் என்பவருக்கு ஆதியில் பாத்தியப்பட்டது என்று கூறியிருந்தால் சரிதான்.

3) அம்மனியம்மாள் என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் எனது கணவருக்கு தந்தைவழி பாட்டி ஆவார். அம்மனியம்மாள் வழக்கு சொத்தை எப்போது வாங்கினார் என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தும் அதற்கு மேற்கே உள்ள சொத்தும் சேர்த்து 3300 சதுரடியை அம்மனியம்மாள் கிரையம் பெற்றார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தின் மொத்த சதுரடி இடம் எவ்வளவு என்றால் கிழமேல் 8 அடி, தென்வடல் 55 அடி ஆகும். மேற்படி 3300 சதுரடியில் கிழக்கில் கடைசியில் உள்ளது தான் வழக்கு சொத்து என்றால் சரிதான். மேற்படி 3300 சதுரடியில் கிழக்கில் தெற்கு பக்கம் உள்ளதுதான் வழக்கு சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு வடக்கிலுள்ள காலிமனையும் அம்மனியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

4) மொத்தமாக 3300 சதுரடியில் கிழக்கில் 750 சதுரடி காலியாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி காலியாக உள்ள 750 சதுரடியில் ஒருபகுதியை பொறுத்துதான் இந்த வழக்கு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அம்மனியம்மாள் வாரிசுகள் மீது நாங்கள் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அம்மனியம்மாளோ அவர்களது வாரிசுகளோ சரோஜாவிற்கு 3300 சதுரடியில் எந்த ஒரு பகுதியையும் விற்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அம்மனியம்மாள் கிரையம் பெறும்போது 3300

சதுரடி உள்ள மனையின் சர்வே எண்.116/2 என்றால் சரிதான். மேற்படி புல எண்.116/2 ஆனது தற்போது புல எண்.116/26, 27, 45, 46, 47, 48 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உட்பிரிவு எனது கணவர் இருக்கும்போதே செய்யப்பட்டது என்றால் சரிதான்.

5) மேற்படி உட்பிரிவுகளில் எந்த உட்பிரிவை பொறுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனது கணவருக்குதான் தெரியும். மேற்படி 3300 சதுரடியில் 2550 சதுரடியில் கட்டிடங்கள் உள்ளது என்றால் சரிதான். தர்மராஜ் தனது பங்கு மற்றும் கிருஷ்ணமூர்த்தி, குமாரசாமியிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தில் 1080 சதுரடியில் கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் சரிதான். தர்மராஜ் பங்கு இடத்திற்கு தெற்கே எனது கணவருக்கான பங்கு உள்ளது என்றால் சரிதான். சண்முகத்தின் பங்கை யார் வாங்கினார் என்றால் எனது கொழுந்தனார் தங்கவேல் வாங்கினார். எனது மாமனார் வைத்தியலிங்கத்தின் பங்கு யாரிடம் உள்ளது என்றால் எனது கொழுந்தனார் பாலைய்யா என்பவரிடம் உள்ளது.

6) மேற்படி பாலைய்யா இடமும், தங்கவேல் இடமும் மேற்படி 1080 சதுரடிக்கு தெற்கே உள்ளது என்றால் சரிதான். தங்கவேல், பாலைய்யா இடத்திற்கு கிழக்கே உள்ள இடத்தைதான் மருதைய்யா என்பவரிடமிருந்து எனது கணவர் கிரையம் பெற்றார் என்றால் சரிதான், அதில்தான் எங்களது வீடு உள்ளது. மேற்படி 1080 சதுரடியில் பிரதிவாதிகளின் வீடு உள்ளது என்றால் சரிதான். அதுபோல் பாலைய்யா, தங்கவேல் அவர்களது வீடு அவர்களுக்குரிய இடத்தில் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு வடக்கில் நடராஜன் என்பவரது பங்கில் அவரது வீடு உள்ளது என்றால் சரிதான். நடராஜன் பங்கும், மருதையாவிடமிருந்து எனது கணவர் வாங்கிய பங்கிற்கும் கிழக்கே உள்ளதுதான் அம்மனியம்மாள் இடம்தான் என்றால் அம்மனியம்மாள் இடத்தை சரோஜா வாங்கியதா சொன்னதால் சரோஜா மீது வழக்கு தாக்கல் செய்து அந்த இடத்தை நாங்கள் வாங்கிவிட்டோம். அதற்கு ஆவணம் உள்ளதா என்றால் நீதிமன்ற தீர்ப்பு உள்ளது.

7) சரோஜாவிற்கும் எங்களுக்குமிடையே நடந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பினரல்ல என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தும் அதற்கு வடக்கே உள்ள 310 சதுரடியும் அம்மனியம்மாள் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்ட பிரிப்படாத சொத்து என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2-ஐ பொறுத்து இந்த வழக்கு அல்ல என்றால் சரிதான். வா.சா.ஆ.1

செட்டில்மென்ட் ஆவணத்தில் கண்ட சொத்தில் ஒரு பகுதிதான் இந்த வழக்கு சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.3 மருதையா மனைவியிடமிருந்து எனது கணவர் வாங்கிய இடத்திற்குரிய ரசீது என்றால் சரிதான். தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லாததாலும், கூட்டு உரிமையாளருக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கிடைக்கக் கூடியது அல்ல என்றாலும் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Kannagi

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.04.10 05:53:19 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU